உச்ச நீதிமன்றத்தில் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்து செய்ததுடன் பழைய நிலைக்கே பதவி மூப்பை வழங்கவும், எல்லாப் பதவிகளிலும், தலித் இன மக்களுக்கு விகிதாச்சாரப்படி பதவியில் அமர்த்தமான நிலை ஆக்கப்பட்டுள்ளது. இப்படி இருக்கிறபோது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தை, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று சூளுரைத்துச் செயல்பட்டு வருகிறார்கள். இவ்விஷயத்திலும், இந்தியாவிற்கே முன்மாதிரியாகச் செயல்பட்டு, சமூக வீராங்கனையாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் பதிலுரை. (குறுக்கீடு)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) கந்தக வாயு பரவியதால் கண்ணெரிச்சல்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: ஒரு point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏற்கெனவே ஒரு கருத்தைச் சொன்னார்கள். எல்லோருக்கும் கண் எரிகிறது; மூச்சுத் திணறல் ஏற்படுகிறது. அவைக்கு ஏதாவது தங்களது விளக்கத்தை அளித்து, அதற்கு நீங்கள் ஒரு தீர்வு காண வேண்டுமென்று தங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே தீர்வு ஒன்றும் இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒன்றைச் சொல்லிவிட்டுப் போனார். அதை நான் விசாரித்த அளவில், அங்கே யாரோ ஒருவர் சிகரெட் புகைத்துவிட்டு Port-Trust-க்கு பக்கத்திலே போட்டிருக்கிறார். அது குப்பையிலே விழுந்து புகை வந்திருக்கிறது. அதனால் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. உறுப்பினர்கள் தைரியமாக உட்கார்ந்து கொண்டிருக்கலாம்.

திரு. துரைமுருகன்: கண் எல்லாம் எரிச்சலாக இருந்தது...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எனக்கு எரியவில்லை. (குறுக்கீடு) எனக்கு எரியவில்லை.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: எனக்கும் இப்போது எரிகிறது. அப்போது எரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது மணலைப் போட்டு அதை அனைத்து விட்டார்களாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: அப்போது எரியவில்லை. இப்போது எரிகிறது. அவர் சொன்னபோதுகூட கண் எரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒருவேளை மனப் பயம்கூட இருக்கலாம் (சிரிப்பு) (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: அங்கே light-ஐப் பார்க்கும்போது எரிகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மெர்க்குரியைப் பார்த்துக் கொண்டிருந்தால், அது எரிந்துகொண்டுதான் இருக்கும். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

5. மானியக் கோரிக்கைகள், 2002-2003, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) **கோரிக்கை எண் 39—வருவாய்த் துறை**—*தொடர்ச்சி*

(ஆ) **கோரிக்கை எண் 11—வணிக வரித் துறை-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு**—*தொடர்ச்சி*

(இ) **கோரிக்கை எண் 29—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு**—*தொடர்ச்சி*

(ஈ) **கோரிக்கை எண் 49—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**—*தொடர்ச்சி*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 கோடி மக்களின் நெஞ்சத்திலே இடம் பெற்று, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன் மாநிலமாக ஆக்குவேன் என்று உறுதிமொழி எடுத்து, பல்வேறு வழக்குகளை, நீதிமன்றத்திலே வென்று, இன்றையதினம் முதலமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிற அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு என்னுடைய பதிலுரையை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர், 'அன்னம் இட்டிருக்கிறீர்கள்; நிதானம் தேவை' என்று கூறினார். 'அன்னம் இட்ட கை' தான் இன்று ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. நிதானம் எதிலே